எம்.சி.ஓ.பி எண்: 3301 /2025 தேதி: 03.08.2026

மசா. : 1

பெயர் : விஷால்

த/பெ. : பெருமாள்

வயது : 19

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 19 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்து புகார் நான் கொடுக்கவில்லை. என் அம்மா 7 நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரி. விபத்து நடந்த எண்ணூர் மேம்பால சாலை கனரக வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான சாலை ஆகும். விபத்து நடந்த சமயம் எனது வாகனத்தின் இடது புறத்திலிருந்து விலகி வலது புறம் சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் தலைக்கவசம் அணியாமல் சென்றதால்தான் எனக்கு தலையில் அடிப்பட்டது என்றாலும் விபத்திற்காக தலைக்கவசம் அணிந்து சென்றேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாலையின் நடுவில் விபத்து ஏற்பட்டதால் நான் ஒழுங்காக வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரி. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணம் அடையவில்லை. நான் தற்பொழுது வேலைக்கு செல்லவில்லை. வருமானம் இல்லை. என்னுடைய தொழில், வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 11 என்னுடைய வாகனத்திற்கான பழுது பார்த்த பில் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது என்றாலும் தற்பொழுது நான் வேலை செய்துவருகிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும் நான்

பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.